குறுந்தொகைப் பாடல்களில் உரிச் சொற்களின் பயன்பாடு

திரு. சி. செரஞ்சன் B.A (Hons)
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் மொழி பழைமை வாய்ந்தது. செம்மொழி என்னும் சிறப்புடன் விளங்குகிறது. தமிழ் மொழியின் செவ்வியல் தன்மைக்கு ஆதாரமாக விளங்குவன சங்ககால இலக்கியங்களேயாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககால இலக்கியங்களைப் பற்றி முழுமையாக அறிவதற்கு இலக்கணம் தொடர்பான ஆய்வுகள் அவசியமானதாகும். அதற்காகச் சங்ககால இலக்கியங்களின் மொழிக்கூறுகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆராயப்பட வேண்டியிருக்கிறது. அந்தவகையில் சங்ககால எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாக விளங்கும் குறுந்தொகைப் பாடல்களில் உரிச் சொற்களின் பயன்பாட்டைத் தொல்காப்பியம், நன்னூலின் அடிப்படையில் இக் கட்டுரை ஆராய முற்படுகிறது.

திறவுச் சொற்கள் - குறுந்தொகை, உரிச்சொற்கள், மொழிக் கூறுகள்.

அறிமுகம்

தமிழ் மொழியின் இலக்கணக் கூறுகளை சங்ககாலத் தொகை நூல்களிலும் பாட்டு நூல்களிலும் கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது. எழுத்து வடிவிலான ஆதாரங்களாகிய இவை, தமிழ்ப் புலவர்களின் மொழிப் புலமையை அறிந்து கொள்ள உதவி புரிகின்றன. அத்தகைய எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய குறுந்தொகைப் பாடல்களில் உரிச் சொற்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

ஆய்வின் நோக்கம்

குறுந்தொகைப் பாடல்களில் உரிச் சொற்கள் பயின்று வரும் நிபந்தனைகளையும் பொருள்களையும் சந்தர்ப்பங்களையும் ஆராய்ந்து உரிச்சொற்களின் தொழிற்பாடுகளை வெளிக் கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பகுப்பாய்வு மற்றும் விபரண முறையியல்களுக்கு அமைய மேற்கொள் ளப்பட்டுள்ளது. குறுந்தொகைப் பாடல்களை நுண்ணிய வாசிப்புக்கு உட்படுத்தி அவற்றில் ஆய்வுக் குத் தேவையான தகவல்களைப் பகுத்தாய்ந்து விபரண முறையில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக் கருதுகோள்

குறுந்தொகைப் பாடல்களில் உரிச் சொற்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன என் பதை ஆய்வுக் கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

ஆய்வின் பயன்

இலக்கியங்களில் உரிச் சொற்களின் தொழிற்பாடு தொடர்பாகவும் மொழியியலில் உரு பனியல் பகுதியில் உரிச்சொற்களின் பயன்பாடு தொடர்பாகவும் கற்கின்ற மாணவர்களுக்கும் கற் பிக்கின்ற ஆசி ரியர்களுக்கும் பயனுள்ளதாக அமையும்.

உரிச்சொல் என்பதன் விளக்கம்

உரிச்சொல் என்பது ஓசை, குறிப்பு, பண்பு, தொழில் ஆகிய பல்வகையான பண்புகளை உணர்த்தும் ஒருசொல். அதற்கென்று ஒரு தனியான நிலையில்லை. ஒரு குணத்தை உணர்த்து வனவும் பல குணங்களை உணர்த்துவனவும் என இரு பிரிவுகளையுடையதாகவும் விளங்கு கின்றன. பெயர்ச் சொற்களை, வினைச்சொற்களை விட்டு நீங்காத தன்மையைப் பெற்றுச் செய்யுட் களுக்கு உரிமையுடையதாக வரும் சொற்கள் உரிச்சொற்களாகும். உரிச்சொல் பெயரோடு உறவு கொண்டு அதன் பண்பினைச் சிறப்பிக்குங்கால் பெயர் உரிச்சொல் என்றும் வினையோடு உறவு கொண்டு அதன் பண்பினைச் சிறப்பிக்குங்கால் வினை உரிச்சொல் என்றும் அழைக்கப்படு கின்றது.

பெயர்ச் சொற்களும், வினைச் சொற்களும் தனித்து நின்று பொருள் புலப்படுத்துவதைப் போலல் லாமல் அந்தந்தச் சொற்களை அடுத்து வந்து அவற்றினது குணங்களை உணர்த்தி வரும் சொற்கள் உரிச்சொற்களாகும். தொல்காப்பியர் இசையினும் பண்பினும் குறிப்பினும் தோன்றிப் பெயரினும் வினையினும் மெய் தடுமாறி வருவது உரிச்சொல்லாகும் எனக் குறிப்பிடுகிறார்.

“உரிச்சொற்கிளவி விரிக்குங்காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடுமாறி
ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்” (தொல். சொல் - 297)

இச் சூத்திரத்தின் அடிப்படையில் சொற்களை அவதானிக்கின்ற பொழுது இசை, பண்பு, குறிப்பை விட்டு வெளிப்படையாகப் பொருள் தரும் சொற்களாகப் பெயர்சொற்களையும் வினைச் சொற்களையுமே குறிப்பிட்டுக் கூறமுடியும்.

தமிழ்மொழியில் பயின்று வருகின்ற சொற்களை ஒரு பொருளினும், ஒரு சொல் பல பொருளினும் அந்தந்த மரபுகளுக்கேற்றபடி மொழி வழக்குகள் பயிலப்படுகின்றன. அவற்றைச்

சூழ் நிலைக்கேற்ற தெரிவு செய்து பயன்படுத்த வேண்டும் என்பதனையும் தொல்காப்பியர் சுட்டிக் காட்டியுள்ளார். அந்த வகையில் எட்டு வகையான உரிச்சொற்களைக் குறிப்பிட்டுள்ளார். அவை யாவன,

இசையின் தோன்றல்
குறிப்பின் தோன்றல்
பண்பின் தோன்றல்
பெயர் – வினைப் பொது
ஒரு சொல் பல பொருள்
ஒரு பொருள் பல சொல்
வழக்கில் பயிலாதன
செய்யுட்களுக்கு உரியன

நன்னூலார் பல்வகைப் பண்பும் பகர்பெயராகி செய்யுட்களுக்கு உரிமையுடையன உரிச் சொற்களெனக் குறிப்பிட்டார்.

"பல்வகைப் பண்பும் பகர் பெயராகி
ஒரு குணம் பல குணம் தழுவிப் பெயர்
வினை ஒருவா செய்யுட்குரியன உரிச்சொல்" (நன்னூல் - 442)

நன்னூலாரின் கருத்துப்படி ஒரு சொல் ஒரு பண்பை உணர்த்தலாம். ஒரு சொல் பல பண்புகளையும் உணர்த்தலாம். இவை பெயர்ச் சொற்களோடும், வினைச் சொற்களோடும் இணைந்து நின்று பண்பை உணர்த்துவதாகும். இது செய்யுள் வழக்கிற்கு மட்டுமே உரியதாகும்.

இலக்கண ஆசிரியர்களும் மொழியியலாளர்களும் உரிச்சொல் பற்றிக் கூறும் போது பெயராகவும், வினையாகவும், அடிச்சொற்களாகவும், பெயருக்கும் வினைக்கும் பொதுவாகவும் வருமெனக் கூறியுள்ளனர்.

உரிச்சொல்லை பெயருக்கும் வினைக்கும் உரிய சொல்லென்றும் கூறலாம். இது பெயருக்கும் வினைக்கும் அடையாக வருவதோடு அவற்றின் பண்பையும் வேறுபடுத்தி நிற்கும் ஆற்றலுடையன. பெயரும் வினையும் தத்தமக்குரிய பொருளை உணர்த்தித் தனித்து நின்று இயங்கும் ஆற்றல் வாய்ந்தவை. இடைச் சொல்லுக்கும், உரிச்சொல்லுக்கும் தனித்தனிப் பொருள் உண்டெனினும் அவை பெயரையும் வினையையும் சார்ந்து நின்றே பொருளை உணர்த்த வல்லன. உரிச்சொற்கள் பெயர்ச் சொற்களுக்கும் வினைச்சொற்களுக்கும் முன்னால் வந்து நின்று அவற்றின் பொருளைச் சிறப்பிக்கும் போது அடைமொழிகளாக விளங்குகின்றன.

உரிச்சொற்களின் தோற்றம்

தமிழ் இலக்கண முறைப்படி சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனப் பாகுபாடு செய்த போதிலும் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களுமே சிறப் புடைய சொற்களாகப் போற்றப்பட்டன. இதனை,

"சொல்லெனப்படுவ பெயரே வினையென்
றாயிரண்டென்ப வறிந்திசினோரே" (தொல். சொல் - 158)

எனும் நூற்பாவின் வாயிலாகத் தமிழ்ச் சொற்களைப் பெயர், வினை என இரண்டாக வகைப்படுத்திய பின்னர்

"இடைச்சொற்கிளவியும் உரிச்சொற் கிளவியும்

அவற்று வழி மருங்கிற் தோன்றும் என்ப" (தொல். சொல் - 159)

இந்த நான்கு சொற்களிலும் சிறப்புடைய சொற்களாகப் பெயர், வினை என்று வகுத்துப் பின்பு அவற்றைச் சார்ந்து வருவனவாக இடைச் சொல்லையும் உரிச்சொல்லையும் அமைத் துள்ளார். பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் தமக்கெனச் சில இலக்கணக் கூறுகளை அடிப் படையாகக் கொண்டுள்ளன. பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபை ஏற்பதையும் வினைச்சொற் கள் காலம் காட்டு தலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. இரண்டுமே திணை, பால், எண், இடம் என்பன வற்றை உணர்த்தவல்லன.

பெயர்ச்சொற்கள் எழுவாய் என்னும் சொற்றொடர்க் கூறாகவும், வினைச்சொற்கள் பய னிலை என்னும் சொற்றொடர்க் கூறாகவும் அமையும் தன்மையுடையன. இத்தகைய பண்புகள் இடைச் சொற்களுக்கோ உரிச்சொற்களுக்கோ இல்லை. உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு முதலாவற்றின் அடிப்படையாகப் பிறக்கும் என்னும் தொல்காப்பியரது கூற்றே பிற்கால இலக்கண நூல்களாகிய நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், தொன்னூல் விளக்கம் முதலானவை குறிப் புரிச்சொல், பண்புரிச்சொல், இசையுரிச்சொல் எனப் பாகுபடுத்துவதற்கு அடிப்படையாக அமைந் திருந்தது எனலாம்.

இடைச்சொல்லாகிய கிளவியும், உரிச்சொல்லாகிய கிளவியும் பெயரும் வினையுமாகிய சொற்களின் வழியாகவும் அவற்றின் இடமாகவும் விளங்கி நிற்குமெனக் கூறியுள்ளார். உரிச் சொல்லானது பொருள், இடம், காலம் முதலியவற்றை உணர்த்தாது இசை, பண்பு, குறிப்பு ஆகிய பொருள்களில் ஒன்றைப் பற்றித் தோன்றுவது, தோன்றிய பின்னர் பெயராகவோ, வினையாகவோ மாற்றம் பெறுகின்றது. அதனால் தான் உரிச்சொற்களின் பொருள் இன்னதென்று வெளிப்படை யாகப் புலனாவதில்லை.

தொல்காப்பியரின் உரிச்சொல் இலக்கணத்தை, உரையாசிரியர்களின் விளக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சில சொற்கள் பெயரைப் போன்றும் பெயரைச் சார்ந்தும் பெயருக்கு உறுப்பாகியும், சில சொற்கள் வினையைப் போன்றும் வினைச் சொற்களைச் சார்ந்தும் வினைச் சொற்களுக்கு உறுப்பாகியும் அமைவதைக் காணலாம்.

உரிச்சொற்களை தனிச்சொல் வகையாக வேறுபடுத்திக் காட்டாத ஆசிரியர் "குறைச் சொற் கிளவி" எனவும் உரிச்சொல்லைக் குறிப்பிட்டுள்ளார்.

"உயிரும் புள்ளியும் இறுதியாகக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் - தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற்கிளவி" (தொல்காப்பியம் - 936)

உரிச்சொல் பற்றிய கருத்துக்களைத் தொல்காப்பியர் நூறு நூற்பாக்களில் எடுத்துக் கூறி யுள்ளார். பத்து நூற்பாக்களைத் தவிர எஞ்சிய தொண்ணூறு நூற்பாக்களில் உரிச்சொல்லுக்குப் பொருள் கூறி உரியியலை ஓர் அகராதி போல அமைத்துள்ளார். மேலும், தொல்காப்பியச் சொல்ல திகாரத்தின் எட்டாவது இயலான உரியியலை அடிப்படையாகக் கொண்டே பிற்காலத்தில் நிகண்டு கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் முதலானவை தோன்றுவதற்கான முன்னோடி இயலாக இவ்வியல் அமைந் திருந்தது.

தொல்காப்பியர் பெயரியலில் சொற்களின் தோற்றம், வகைகளை விளக்குகிறார். சொற் களின் அமைப்பில் உரிச்சொற்களைப் பற்றிக் கூறாமல் செல்லும் இலக்கண ஆசிரியர், பின்பு சொல்லதிகாரத்தின் எட்டாவது இயலாக உரியியலை அமைத்து அதன் பொருள்களை விளக்கு கின்றார். உரிச்சொற்களுக்கென்று தனி இயல் அமைக்கும் தேவை அன்றே இருந்திருக்கின்றது

என்பதனூடாக உரிச்சொற்களின் முக்கியத்துவத்தை உணர முடிகின்றது.

குறுந்தொகைப் பாடல்களில் உரிச்சொற்களின் பயன்பாடு.

குறுந்தொகைப் பாடல்களில் பயின்று வந்துள்ள உரிச்சொற்களைத் தொல்காப்பியர் கூறியுள்ள உரிச் சொற்களின் இயல்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, உரிச்சொற்கள் பெயரைச் சார்ந்தும் வினையைச் சார்ந்தும் பெயரையும் வினையையும் சார்ந்தும் வல்லடையாகவும் வந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

நனி என்னும் உரிச்சொல்

நனி என்னும் உரிச்சொல் குறிப்பின் அடிப்படையில் பொருளுணர்த்தும் உரிச்சொல்லெனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில் குறுந்தொகைப் பாடல்களில் நனி என்னும் உரிச்சொல் "மிகுதி" என்னும் குறிப்புப் பொருளில் பயின்று வந்துள்ளது.

"யானுங் காதலென் யாயு நனி வெய்யள்..." (குறுந்தொகை - 51)
"அணிமிகு மென்கொம் பூழ்த்த
"மணிமருள் பூவின் பாடு நனி கேட்டெ ..." (குறுந்தொகை - 138)
"அளிதோ தானே நானே நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே - இனியே .." (குறுந்தொகை - 149)
"மாலை நனி விருந்தயர் மார்..." (குறுந்தொகை - 155)
"நலமிழந்த ததனிலு நனியின் மாதே..." (குறுந்தொகை - 245)
"கானலும் புலம்பு நனியுடைத்தே வானமும்..." (குறுந்தொகை - 245)
"நனிசேய் நாட்டர் நன்முன்னலரே ..." (குறுந்தொகை - 380)

நன என்னும் உரிச்சொல்

நன என்னும் உரிச்சொல் "அவைக்களத்தையும்" "அகலமாகிய இடத்தையும்" குறிப்பால் உணர்த்தும் என்பர் தொல்காப்பியர். ஆனால், குறுந்தொகைப் பாடல்களில் அகலப் பொருளை உணர்த்தி வந்துள்ளது.

"நனந்தலை யுலகமுந் துஞ்சும்..." (குறுந்தொகை - 06)
"நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த ...." (குறுந்தொகை - 272)
"கல்லுயர் நனந்தலை நல்ல கூறிப் ..." (குறுந்தொகை - 297)
"தாநீர் நனந்தலை புலம்பக்..." (குறுந்தொகை - 391)

சாயல் என்னும் உரிச்சொல்

சாயல் என்னும் உரிச்சொல் பண்படிப்படையில் பொருளுணர்த்தும் உரிச்சொல்லெனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். குறுந்தொகைப் பாடல்களில் சாயல் என்னும் உரிச்சொல் "மென்மை" என்னும் குறிப்புப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"பெய்யாப் பூவின் மெய்சாயினாளே ..." (குறுந்தொகை - 09)
"குவளை வண்டு படு மலவிற் சாஅய் தமியேன்..." (குறுந்தொகை - 30)
"இலங்குவளை நெகிழச் சாஅய் புலம்பனிந்தன்றவர்..." (குறுந்தொகை - 50)
"வேனிலானேறு போலச் சாயினனென்பரும் மாலை..." (குறுந்தொகை - 74)
"குன்ற நாடன் கேண்மை மென்றோள் சாய்த்துஞ்..." (குறுந்தொகை -90)

கடி என்னும் உரிச்சொல்

கடி என்னும் உரிச்சொல் பல பொருளினைக் குறித்து வருமெனத் தொல்காப்பியர் குறிப்பிடு கிறார்.

"கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்ச முன்தேற்று ஆயீரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டாகும்மே" (தொல். சொல். 389)

குறுந்தொகைப் பாடல்களில் கடி என்னும் உரிச்சொல் விரைவு, மிகுதி, புலமை, அச்சம், சிறப்பு, கூர்மை என்னும் பொருள்களில் பயின்று வந்துள்ளது. சில பாடல்களில் கடி என்னும் உரிச் சொல் ஈறுதிரிந்து கடு எனவும் அமைந்து வந்துள்ளது.

"வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென..." (குறுந்தொகை - 39)
"காலையெழுந்து கடுந்தேர் பண்ணி..." (குறுந்தொகை - 45)
"கடும்பகட்டி யானை நெடுந்தேரஞ்சி.." (குறுந்தொகை - 91)
"கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்..." (குறுந்தொகை -132)
"அதன் எதிரி கான மஞ்ஞை கடிய ஏங்கும்..." (குறுந்தொகை -194)
"கடுமாக் கடவுமதி பாக நெடுநீர்ப்ப..." (குறுந்தொகை -250)
"நில்லாது கழிந்த நல்லென் கடுந்தேர்.." (குறுந்தொகை - 336)
"நெடுமடல் குருத்தொடு மாயாக் கடுவளி தொகுத்த" (குறுந்தொகை - 372)
"கடிது இடியுருமிற் பாம்புபை யவிய...." (குறுந்தொகை - 391)

இப்பாடல் அடிகளில் கடி என்ற உரிச் சொல் "விரைவு" என்னும் பொருளில் வந்துள்ளது.

"கடும்பனி யச்சிர நடுங்கஞ் குறவே...." (குறுந்தொகை - 76)
"கடும்புன றொகுத்த நடுங்கஞ ரள்ளற்..." (குறுந்தொகை - 103)
"கல்கிரையாகிக் கடுநவைப் படஇயரே....." (குறுந்தொகை - 107)
"நுணங்கிக் கடுத்தலுங் தணிதலு மின்றே..." (குறுந்தொகை - 136)
"கடுவிசை யுருமின் கழறு சூரவளை...." (குறுந்தொகை - 158)
"கடும்புனலடை கரை நெடுங்கயந் தீட்ட...." (குறுந்தொகை - 171)

இப்பாடல் அடிகளில் வரும் கடி என்னும் உரிச்சொல் மிகுதி என்னும் பொருளினை உணர்த்துகின்றது.

"கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல் அறியா துண்ட மஞ்ஞை.." (குறுந்தொகை - 105)

இப் பாடல் அடியில் கடி என்னும் உரிச்சொல் புதுமை என்ற பொருளில் வந்துள்ளது.

"நெடுங்கை வன்மான் கடும்பகை உழந்த..." (குறுந்தொகை - 141)
"மழைமுழங்கு கடுங்குரலோர்க்கும் கழை திரங்..." (குறுந்தொகை - 397)

இப் பாடல் அடிகளில் கடி என்ற உரிச்சொல் "சிறப்பு" என்னும் பொருளில் வந்துள்ளது.

"நீடு மயிர்க் கடும்பலூகக் கறைவிரலேற்றை..." (குறுந்தொகை - 373)

இப் பாடலடியில் கடி என்னும் உரிச்சொல் கூர்மை என்னும் பொருளில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

இயம்பும் என்னும் உரிச்சொல்

இயம்பும் என்னும் உரிச்சொல் 'இசைப்பொருளை' உணர்த்தும் முகமாக இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. குறுந்தொகை இலக்கியத்தில் ஐந்து பாடல்களில் இவ் உரிச்சொல் பயின்று வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

"கருவி மாமழை வீழ்ந்தென வருவி விடரகத் தியம்பு நாடவெம்..." (குறுந்தொகை - 42)
"நல்லேறியங்குதோ றியம்பும் பல்லான்தொழுவத் தொருமணிக் குரலே.."
(குறுந்தொகை - 373)
"குடுமிக் கோழி நெடுநக ரியம்பும் பெரும்புலர் விடியலு...." (குறுந்தொகை - 234)
"விண்டோம் விடரகத் தியம்பும் குன்ற நாடற் கண்ட வெங் கண்ணே.."
(குறுந்தொகை - 241)
"ஈர்மணற் காட்டாறு வரூஉம் தேர்மணி கொல்லான் டியம்பிய வுளவே.."
(குறுந்தொகை - 275)

வாள் என்னும் உரிச்சொல்

'ஒள்' என்னும் பொருளில் "வாள்" என்னும் உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறுந் தொகையில் மூன்று இடங்களில் இச்சொல் இதே கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"பரிதப்பினவே கண்ணே நோக்கி நோக்கி வாளிழந்தனவே...." (குறுந்தொகை - 44)
"கிளையண் முளைவா வெயிற்றள் வளையுடைக் கையள்.." (குறுந்தொகை - 119)
"வாணுதல் மனையுறை மகளிர்க் காடவ ருயிரென..." (குறுந்தொகை - 135)

வம்பு என்னும் உரிச் சொல்

வம்பு என்னும் உரிச்சொல் நிலையின்மை என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறுந்தொகையில் இச் சொல் மூன்று பாடல்களில் வந்துள்ளது.

"வம்ப மாரியைக் காரென மதித்தே...." (குறுந்தொகை - 66)
"வம்ப நாரையை சேர்க்கும்..." (குறுந்தொகை - 236)
"வம்புப் பெய்யுமான் மழையே வம்பன்று....." (குறுந்தொகை - 382)

வெம்மை என்னும் உரிச்சொல்

வெம்மை என்னும் உரிச்சொல் 'விருப்பம்' என்னும் குறிப்புப் பொருளில் பயன்படுத்தப்படு கின்றது. குறுந்தொகைப் பாடல்களிலும் விருப்பம் என்னும் பொருளிலே பயன்படுத்தப்பட்டுள்ளது.

"நாம் வெங்காதலர் சென்ற வாறே..." (குறுந்தொகை - 255)
"அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர் சேமச்....." (குறுந்தொகை - 277)

தட என்னும் உரிச்சொல்

தட என்னும் உரிச்சொல் 'பெருமை' என்னும் பொருளைக் குறிப்பாக உணர்த்தி வருவ தோடு வளைவு என்னும் பொருளையும் உணர்த்தி நிற்கின்றது. குறுந்தொகைப் பாடல் அடிகளில் 'தட' என்னும் உரிச்சொல் பரந்த, பெரிய என்னும் பொருளினைச் சார்ந்து வந்துள்ளதை அவ தானிக்கக் கூடியதாகவுள்ளது.

"எளியவாகிய தடமென்றோளே..." (குறுந்தொகை - 77)
"ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென்தோளே..." (குறுந்தொகை - 87)
"தாம்பசந்தனவென் றடமென் றோளே.." (குறுந்தொகை - 121)
"எஃகு விளங்கு தடக்கை மலையன் கானத்தார...." (குறுந்தொகை - 198)

"தடவுநிலைத் தாழைச் சேர்ப்பக்..." (குறுந்தொகை - 219)
"தணப்பின் நெகிழ்பவெந் தடமென்றோளே..." (குறுந்தொகை - 299)

பேம் என்னும் உரிச்சொல்

பேம் என்னும் உரிச்சொல் 'அச்சம்' என்னும் குறிப்புப் பொருளை உணர்த்தி வருகின்றது. குறுந் தொகைப் பாடல்களிலும் அச்சம் என்னும் பொருளை உணர்த்தும் நோக்கிலே கையா ளப்பட்டுள்ளது.

"மன்ற மராஅத்த பே எழுதிர் கடவுள்..." (குறுந்தொகை - 87)
"பெரும்பூட் பொறையன் பேஎழுதிர் கொல்லி...." (குறுந்தொகை - 89)

வய என்னும் உரிச்சொல்

தொல்காப்பியர் ஒரு சொல் ஒரு பொருளுணர்த்தும் உரிச்சொல்லாக வய என்னும் உரிச் சொல்லைக் குறிப்பிட்டுள்ளார். வய என்னும் உரிச்சொல் 'வலிமை' என்னும் பொருளையுடைது எனக் கூறியுள்ளார். "வயவலி யாகும்" (தொல். சொல் - 366) குறுந்தொகைப் பாடல்களிலும் வலிமை என்னும் பொருளிலே பயன்படுத்தப்பட்டுள்ளது.

"சீறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கி..."(குறுந்தொகை - 88)
"வயச்சுறா வழங்கு நிரத்தம் சின்னா ...." (குறுந்தொகை - 230)
"வயச்சுறா வெறிந்த புண்டனிற் தெந்தையும்...." (குறுந்தொகை - 269)

முனைவு என்னும் உரிச்சொல்

முனைவு என்னும் உரிச்சொல் 'வெறுப்பு' என்னும் பொருளில் வருமெனத் தொல்காப் பியத்தில் கூறப்பட்டுள்ளது. குறுந்தொகைப் பாடல்களிலும் அதே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"இனிது அடங்கினரே மாக்கள் முனிவு இன்று...." (குறுந்தொகை - 06)
"சோற்றுநிலை முனைஇய செங்கட் காரான்....." (குறுந்தொகை - 261)
"உறுகழிச் சிறுமீன் முனையிற் செறுவிற் கண்ணாறு...." (குறுந்தொகை - 296)
"முனிபடர் உழந்த பாடுஇல் உண்கண்....." (குறுந்தொகை - 357)
"வேற்று முனை வெம்மையின் சாத்து வந்த திறுத்தென...." (குறுந்தொகை - 390)

புலம்பு என்னும் உரிச்சொல்

புலம்பு என்னும் உரிச்சொல்லைத் தொல்காப்பியர் ஒரு சொல் ஒரு பொருள் உணர்த்தும் உரிச் சொல்லெனக் குறிப்பிட்டார். புலம்பு என்னும் உரிச்சொல்லானது 'தனிமை' என்ற பொருளில் வருமெனக் கூறியுள்ளார். "புலம்பே தனிமை" (தொல். சொல் - 331)

"இலங்குவளை நெகிழ்ச் சாஅய்ப் புலம்பனிந்தன்றவர்..." (குறுந்தொகை - 50)
"அலங்கல் உலவை ஏறி ஓய்யெனப் புலம்பு தரு குரல...." (குறுந்தொகை - 79)
"புதுநல னிழந்த புலம்புமா ருடையள்..." (குறுந்தொகை - 81)
"புள்ளும் மாவும் புலம்பொடு வதிய...." (குறுந்தொகை - 118)
"நெடுந்தாள் வேங்கை பூவுடை யலங்குசினை புலம்பத் தாக்கி...." (குறுந்தொகை - 134)

வார்தல் என்னும் உரிச்சொல்

வார்தல் என்னும் உரிச்சொல் பெயர்ச்சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் பொதுவாக வரும் உரிச்சொல்லெனத் தொல்கர்பியர் குறிப்பிட்டுள்ளார். 'நேர்தல்', 'நெடுமை' என்னும் பண்புப்

பெயர்களையொட்டி வருமெனக் கூறியுள்ளார்.

"வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழியரிவை..." (குறுந்தொகை - 14)

இப்பாடல் அடியில் வார்தல் என்னும் உரிச்சொல் 'நேர்பு' என்னும் பொருளில் வந்துள்ளது.

"வாருறு வணங்கதுப் புணரிப் புறஞ்சேர்...." (குறுந்தொகை - 82)
"பெருந்துறை நுண்மண லறல் வார்ந் தள்ள..." (குறுந்தொகை - 116)
"வார்கோல் வல்லிற் கானவர் நங்கைப் பெருந்தோள்..." (குறுந்தொகை - 335)
"செங்கோற் பதவின் வார்குழல் கறிக்கும் மடக்கண்..." (குறுந்தொகை - 363)

இப் பாடல் அடிகளில் வார்தல் என்னும் உரிச்சொல் 'நெடுமை' என்னும் பொருளில் வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வை என்னும் உரிச்சொல்

வை என்னும் உரிச்சொல் 'கூர்மை' என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
"வார்திலங்கு வையெயிற்றுச் சின்மொழியரிவை..." (குறுந்தொகை - 14)
"கொடுஞ்சிலை மறவர் வைவார் வாளி விறாத்பகை...." (குறுந்தொகை - 297)

உயா என்னும் உரிச்சொல்

உயா என்னும் உரிச்சொல் 'உயங்கல்' என்னும் குறிப்புப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள் ளது.

"உயவு நோயறியாது துஞ்சுஆர்க்கே..." (குறுந்தொகை - 28)
"சுரஞ்சென் மாக்கட் உயவுத்துணையாகும்..." (குறுந்தொகை - 207)
"களிறுதன் உயங்குநடை மடப்பிடி வருத்த நோனாது...." (குறுந்தொகை - 307)
"யானைக் கைம்மடித்து உயவும் கானமும் இனிய ..."(குறுந்தொகை - 388)

தவ என்னும் உரிச்சொல்

தவ என்னும் உரிச்சொல் 'மிகுதி' என்னும் குறிப்புப் பொருளை உணர்த்தி வருமெனத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. "உறுதவ நனியென வரூஉ மூன்றும் மிகுதி செய்யும் பொருள என்ப" (தொல். சொல் -334) இந்தப் பொருள்களையொட்டியே குறுந்தொகையிலும் பயின்று வந் துள்ளது.

"உயிர் தவச் சிறிது காமமோ பெரிது..." (குறுந்தொகை - 18)
"தவப்பல் நாள்தோள் மயங்கி வௌவும்..." (குறுந்தொகை - 271)
"நல்கிய நாள்தவச் சிலவே அலரே..." (குறுந்தொகை - 328)
"முயங்கிய நாள்தவச் சிலவே அலரே ...." (குறுந்தொகை - 393)

முடிவுரை

சங்ககால இலக்கியங்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டன என்ற கருத்து நிலவிய போதிலும், தொல்காப்பியத்தின் அடிப்படையில் சங்ககால இலக்கியங்களின் சொல்லிலக்கணங் கள் அமையப் பெற்றுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குறிப்பாகத் தொல்காப்பியரது உரிச்சொல் பற்றிய பாகுபாடானது சங்கப் பாடல்களில் பெரிய மாற்றம் எதுவும் நிகழ்ந்ததாக வில்லை. இவ்வகையான ஆய்வுகள் சங்ககால இலக்கியப் பரப்பு முழுவதிலும் நிகழும் போது இவை மேலும் உறுதிப்படுத்தப்படலாம்.

உசாத்துணை நூல்கள்

* அரவிந்தன், மு.வை., (1995), உரையாசிரியர்கள், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.
* கந்தசாமி, பேரா., தேவநேயப் பாவாணர், ஞா., (2001), தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையர், கழக வெளியீடு, சென்னை.
* கோபாலையர், தி.வே., அரணமுறுவல், ந., (பதிப்பாசிரியர்), (2003), தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை.
* நாகராசன், வி., (2007), குறுந்தொகை மூலமும் உரையும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
* வையாபுரிப்பிள்ளை, எஸ்., (ப. ஆ), (2005), சங்க இலக்கியம் முழுவதும், (பாட்டும் தொகையும்) இரண்டு தொகுதிகள், முல்லை நிலையம், சென்னை.